கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மேலூர் சட்டமன்ற தொகுதி கொட்டாம்பட்டி ஒன்றிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் ராஜராஜன், பழனி, தொகுதி பொறுப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

அனைத்துத் தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

காவல் நிலையங்களுக்கு புகார் கொடுக்க வருகிறவர்களிடம் கண்ணியத்தோடு நடந்திட வேண்டும்!

சட்டம் – ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூலை 2 -

சட்டம் ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக் கூட்டம், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதல்வர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றும் காவல் நிலையங்களுக்கு புகார் கொடுக்க வருகிறவர்களிடம் கண்ணியத்துடன் நடத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30.6.2025) தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்களுடன் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்து ஆய்வு செய்ததோடு, காணொலிக் காட்சி வாயிலாக மத்திய, மேற்கு மற்றும் தெற்கு மண்டல காவல்துறை தலைவர்களுடனும் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மண்டல வாரியாக ஆய்வு மேற்கொண்டு, குற்றங்கள் குறித்தும், அவைகள் மீது எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்ததோடு, நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகள் குறித்தும் கேட்டறிந்தார். காணொலி ஆய்வில் கலந்து கொண்ட மண்டல காவல்துறை தலைவர்கள் தங்கள் மண்டலங்களில் குற்றத்தடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள் குறித்து விளக்கி கூறினார்கள்.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, பொது அமைதியை மிக கவனமாக கையாண்டு வருவதையும், இவ்வரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில் முதலீடு, புதிய தொழிற்சாலைகள், புதிய வேலைவாய்ப்புகள் போன்றவை அதிகரித்துள்ளதையும் குறிப்பிட்டு, அத்துடன் அனைத்து தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்றால் அதற்கு காவல்துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாய் விளங்குகின்றது என்றும் குறிப்பிட்டார்.

கண்ணியத்தோடு நடந்து கொள்க!

மேலும், காவல் நிலையங்களுக்குப் புகார் கொடுக்க வருகின்ற அனைத்து பொதுமக்களிடமும் கண்ணியத்தோடு நடந்து கொண்டு, அவர்களது புகார்கள் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும், கஞ்சா, கள்ளச்சாராய வழக்குகளில் கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தர தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வதந்திகள் பரவுவதை தடுத்திட வேண்டும்!

சட்டம் ஒழுங்கு தொடர்பான முக்கியப் பிரச்சினைகள் ஏற்படும்போது தொடர்புடைய காவல்துறை உயர் அலுவலர்கள் உடனடியாக ஊடகங்களை சந்தித்து அந்த பிரச்சினை குறித்து தெளிவாக விளக்கம் அளித்து, வதந்திகள் பரவுவதை தடுத்திடவும், காவல்துறையின் மீதான நம்பிக்கையை நிலைநிறுத்தவும் அது உதவும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சாதி மற்றும் சமய பூசல்களில் ஈடுபடுவர்கள், வதந்தி மற்றும் வெறுப்புணர்வை பரப்பி பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் ஆகியோர் மீது பதிவு செய்யப்படும் வழக்குகளில் கூடுதல் கவனம் செலுத்திட அறிவுறுத்தினார்.

பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவது, குற்றத்தடுப்பு நடவடிக்கைகளில், சமுதாயத்தின் பங்களிப்பை ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றச் செயல்கள் நடக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், காவல் துறையினர் முழுமையாக செயல்பட சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், காவல்துறையினர் சட்டம் ஒழுங்கை பேணிப் பாதுகாத்து, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், காவல் துறை இயக்குநர் (நிருவாகம்) ஜி.வெங்கட்ராமன், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) சௌ. டேவிட்சன் தேவாசிர்வாதம், பெருநகர சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக மத்திய மண்டல காவல் துறை தலைவர் ஜோஷி நிர்மல் குமார், மேற்கு மண்டல காவல் துறை தலைவர் டி.செந்தில் குமார், தெற்கு மண்டல காவல் துறை தலைவர் பிரேம் ஆனந்த் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

“ஓரணியில் தமிழ்நாடு” 30 சதவீதம் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்!

கடலூர் மேற்கு மாவட்ட கழக பாக முகவர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

அமைச்சர் கே.என்.நேரு தலைமை – அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை – சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. வரவேற்புரை!

கடலூர், ஜூலை 2 –

கடலூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில், திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி ,பண்ருட்டி தொகுதிகளின், BLA–2 பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் 30.06.2025, திங்கள் கிழமை, மாலை 4 மணியளவில். காடாம்புலியூர் ஏவி மகாலில் நடைபெற்றது. மண்டல பொறுப்பாளர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார். பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சபா .இராசேந்திரன் எம்.எல்.ஏ, வரவேற்புரையாற்றினார்,

மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன், தொகுதி பொறுப்பாளர்கள் சுபா.சந்திரசேகரன், பா.துரைசாமி, செ.புஷ்பராஜ் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பாவாடை. கோவிந்தசாமி, வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட கழக பொருளாளர் ஜி.தண்டபாணி, முன்னாள் எம்.எல்.ஏ வி.டி.கலைச்செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்..எஸ்.எம்.தணிகைச்செல்வன், ஆனந்தி சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், கே.அறிவழகன், ஆர்.பாலகிருஷ்ணன், ஆர்.இராதாகிருஷ்ணன், க.இராஜேந்திரன், செந்தமிழ் செல்வி கருப்பசாமி,

ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர் வி.அமிர்தலிங்கம், ப.செங்குட்டுவன், த.சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக.கோவிந்தசாமி, தி.வேல்முருகன், முடப்புளி ஆசைதம்பி, ப.சுரேஷ், அ.குணசேகரன், ஆர்.சந்தோஷ்குமார்,

நகர செயலாளர்கள் க.இராஜேந்திரன், ப.மணிவண்ணன், க.தண்டபாணி, வி.குருநாதன், வி.பி.பி.பரமகுரு, பேரூர் கழக செயலாளர்கள் வ.ஜெயமூர்த்தி, ஆர்.சுந்தரவடி வேல், சி.செல்வம், பெண்ணாடம் குமார்,

மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ராமு, மாணவரணி சதீஷ்குமார், வழக்கறிஞர் அணி அருள்குமார், பாரிஇப்ராஹிம். பகுத்தறிவி பேரவை மதனகுரு, தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்த், மருத்துவர் அணி டாக்டர் ஆர்.இராஜேஷ், மகளிரணி ஜெயந்தி நடராஜன், சிறுபான்மையினர் அணி அன்சர் அலி, முகமது யூசப் மற்றும் செந்தில்குமார், தங்க.அன்பழகன், சாமிநாதன், இந்து மதி, பு.அரங்கநாதன், டி.குணா. க.சேகர், கோனூர் மதியழகன், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பழனி.சுரேஷ், வழக்கறிஞர் நாராயணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்:

எதிர்வரும், 2026 சட்டமன்ற தேர்தலில் நமது கடலூர் மேற்கு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகின்ற கழக வேட்பாளர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறவைக்கின்ற வகையில், கழக முதன்மைச் செயலாளரும், நமது மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகம் – குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் மாண்புமிகு. கே.என். நேரு, அவர்களின் வழிகாட்டுதலின் படி, தேர்தல் பணியாற்றி தி.மு.கழகம் ஏழாவது முறையாகவும், திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் ஆட்சிக் கட்டிலில் அமரவைத்து, தமிழ்நாட்டை எல்லா வகையிலும் நம்பர் ஒன் மாநிலமாக வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நம் மண், மொழி, மானத்தை காப்பாற்ற ஒன்றாக இணைந்து ” ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திடமும் கொண்டு சேர்ப்போம். அதற்காக ஜூலை 03–ம் தேதி தொடங்கி 45 நாட்களுக்கு நடைப்பெறும். இதில் சிறப்பு பயிற்சி பெற்ற தகவல் தொழில் நுட்ப அணியைச் சார்ந்த தொகுதி ஒருங்கிணைப்பாளர் தொகுதிக்குட்பட்ட (பிடிஏ) வாக்குச்சாவடி ஏஜெண்டுகளுக்கு பயிற்சி அளித்து வாக்குச்சாவடியில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் நேரில் சென்று பரப்புரை செய்வதை உறுதி செய்ய வேண்டுமென மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்களையும், நிர்வாகிகளையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

” ஓரணயில் தமிழ்நாடு இயக்கம் உறுப்பினர் சேர்க்கைக்கான பரப்புரை மட்டுமல்ல, இது தமிழ் நாட்டு மக்களை நம் மண், மொழி, மானம் காக்க ஒன்றிணைக்கும் முன்னெடுப்பு ஆகும்.

தமிழ்நாட்டுக்கான திட்டங்களை புறக்கணித்து, தமிழ் பண்பாட்டையும் நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதபிரிவினை வாதத்தை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்கு துணைப்போகும் துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுக்க ப்படுகிறது.

எனவே கடலூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பிடிஏ & பிஎல்ஏ–II மற்றும் இளம் நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்து அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு தொடர்புடைய இல்லங்களுக்கு சென்று வாக்களார்களை நேரில் சந்தித்து திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துக்கூறியும், அதனடிப்படையில் பயன்பெற்றுள்ளதை உறுதி செய்து அவர்களில் வாக்காளர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 30 சதவிகித அளவில் கழக உறுப்பினர்களாக அவர்களை பதிவு செய்து ” ஓரணயில் தமிழ்நாடு பணியை சிறப்புடன் மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட,ஒன்றிய,நகர,பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்களையும், நிர்வாகிகளையும், சார்பு அணி நிர்வாகிகளையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தன்னலமற்ற சேவைகளால்

போற்றுதலுக்குரியவர்கள் மருத்துவர்கள்!

தேசிய மருத்துவ தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 2 -

தன்னலமற்ற சேவைகளால் போற்றுதலுக்குரியவர்களாக திகழ்கிறார்கள் மருத்துவர்கள் என்று தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

எளிய பின்புலங்களில் இருந்து வந்து, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி, மக்களின் நலன் காக்கும் தலைசிறந்த மருத்துவர்கள் அனைவருக்கும் தேசிய மருத்துவர்கள் தின வாழ்த்துகள்!

தன்னலமற்ற சேவைக்குச் சொந்தக்காரர்களான நமது மருத்துவர்கள் அனைவருமே போற்றுதலுக்குரியவர்கள்! அவர்களது சேவைக்கு நமது நன்றியின் அடையாளமாகத் தலைசிறந்த 50 மருத்துவர்களுக்கு இன்று விருதுகள் வழங்கி மகிழ்கிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்:

கடமை தவறினால் கடும் நடவடிக்கை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 2-

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் யாராக இருந்தாலும் கடமை தவறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டம் ஒழுங்கு ஆய்வு கூட்டம் நிறைவடைந்த பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்!

மீறி நடந்தால் அதில் ஈடுபட்டவர் ரவுடியானாலும், அரசியல் பின்புலம் கொண்டவரானாலும், காவலரே ஆனாலும் அதற்கான தண்டனையை விரைவில் பெற்றுத் தந்து நீதி நிலைநாட்டப்படும் ஆட்சியாகத்தான் திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகிறது.

“போதைப் பொருள்-கள்ளச் சாராயம் - பெண்கள் பாதுகாப்பு - லாக்கப் மரணங்கள் போன்றவற்றில் யார் கடமை தவறினாலும் அரசின் நடவடிக்கை மிக மிக கடுமையாக இருக்கும்” என்பதைச் சட்டம் - ஒழுங்கு குறித்த இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தினேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை!

அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும்!

போக்குவரத்து – மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜூலை 2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் அனைத்து வீட்டு மின்இணைப்புகள், குடிசை மற்றும் குறுந்தொழில் நுகர்வோர்கள், விசைத்தறி நுகர்வோர்கள், 50கிலோவாட் வரை உள்ள தாழ்வழுத்த தொழிற்சாலைகள் மற்றும் 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிகர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை. இதன்மூலம் 2.83 கோடி மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள். மேலும் தற்போது உள்ள அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மின்சார வாரியங்களின் நிதி நிலைமை சீராக இருப்பதற்காக அந்தந்த மாநிலங்களின் ஒழுங்குமுறை ஆணையம் அவ்வப்பொழுது மின்கட்டணத்தில் மாற்றம் செய்துவருகிறது. தமிழ்நாட்டை பொறுத்த வரையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பல்லாண்டு மின்கட்டண உயர்வை அறிவித்து ஆண்டுதோறும் நுகர்வோர் விலைக் குறியீட்டு அடிப்படையில் மின்நுகர்வோர்களுக்கு மின் கட்டணத்தை மாற்றி அமைத்து ஆணை வெளியிடுகிறது. அதன்படி 2025-26 ஆண்டிற்கு ஜூலை 1 ஆம் தேதி முதல் வரக்கூடிய மின்கட்டண மாற்றங்களில் பொது மக்கள் மற்றும் நுகர்வோர் நலன் கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் படி அனைத்து, 2.42 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய மின் கட் டண மாற்றங்களை அரசே ஏற்று அதற்கான மானியத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் என்று உத்தரவிட்டதை ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

மேலும் அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் மற்றும் குடிசை இணைப்புகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும்.

100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை. தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.374.89 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது.

வீட்டு மின் நுகர்வோர்களுக்கு, நிலைக்கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவதில் இருந்த முழுவிலக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீட்டு மின்நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

தற்பொழுது விவசாயம், கைத்தறி, விசைத்தறி , வழிப்பாட்டுதலங்கள் மற்றும் தாழ்வழுத்த தொழிற்சாலை ஆகிய மின்கட்டண பிரிவிற்கு வழங்கப்பட்டு வரும் மின்சார மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்கட்டணச் சலுகைகள்:

1. இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிக மின் நுகர்வோர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள மின்கட்ட ணத்தை (Energy charges) தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண் டொன்றுக்கு ரூ.51.40 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 34 இலட்சம் சிறு வணிக மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள்

2.50 கிலோவாட் வரை ஒப்பந்த பளு (sanctioned load) கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு (LT (III) B Industries) உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.76.35 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.81 லட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

3.குடிசை மற்றும் குறு தொழில்களுக்கு (LT (III) A(1) - Cottage and Micro Industries) உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ.9.56 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.70 லட்சம் குடிசை மற்றும் குறு தொழில் மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

4. விசைத்தறி நுகர்வோர்களுக்கு 1000 யூனிட் வரை இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் 1001 யூனிட்டுகளுக்கு மேல் உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண் டொன்றுக்கு ரூ.7.64 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 1.65 லட்சம் விசைத்தறி நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

எனவே 2025-26 ஆம் ஆண்டின் மின்கட்டண உயர்வின் படி தமிழ்நாட்டில் சுமார் 2.83 கோடி மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லாமல் பயனடைவார்கள். இதனால் தமிழக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.519.84 கோடி கூடுதல் செலவாகும். இந்த மானியத் தொகையினை தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும்.

இது தவிர பெரிய தொழில், பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் பிறவகை கட்டண பிரிவு களுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள வாறு 3.16%-க்கு மிகாமல் மின்கட்டணம் உயர்த்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், திரு.வி.க. நகர், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

நாள்	நேரம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
02.07.2025 புதன்கிழமை	மாலை 4.00 மணி	திரு.வி.க.நகர் தொகுதி	எம்.கே.டி.மஹால், ஸ்டாரன்ஸ் சாலை, ஓட்டேரி.
03.07.2025 வியாழக்கிழமை	மாலை 4.00 மணி	கொளத்தூர் தொகுதி	திருவள்ளுவர் மண்டபம், பெரியார் நகர்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 30-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி